நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W.9 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பத்ரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அய்யாவு |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW9** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**2 ம் எதிரி ஆஜர் மற்றும் 1 ம் எதிரி ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.45PM )

1. நான் தற்போது மேட்டூர் வனச்சரகத்தில் கோனூர் பீட்டில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது மருத்துவ விடுப்பில் உள்ளேன். 22.01.2024 ம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் மேட்டூர் வனச்சரகத்தில் பணியில் இருந்தேன். அப்போது கருங்கல்லூர் கிராமம் மூலக்கொட்டாயில் வசிக்கும்

மகேந்திரன் என்பவர் சட்டம் விரோதமாக கருங்காளி மரத்தை வெட்டி அவருடைய அக்கா ஈஸ்வரி நிலத்தில் பதுக்கி வைத்திருப்பதாக குரும்பனூர் வடக்கு பீட்டைச் சேர்ந்த நல்லதம்பி என்பவருக்கு கிடைத்த தகவலின் பேரில் நானும், சதீஸ் வனக்காப்பாளர், கோகுலக்கண்ணன் வனக்காப்பாளர், மற்றும் சுரேஸ்குமார் வனச்சரகர் ஆகியோருடன் இரவு 08.30 மணிக்கு ஈஸ்வரி என்பவரின் வீட்டிற்கு சென்றோம்.

2. அங்கு பாலித்தீன் கவரில் கருங்காளி கட்டைகள் மற்றும் கருங்காளி தூள்கள் கட்டிவைக்கப்பட்டிருந்தது. ஈஸ்வரியிடம் இதுக்குறித்து கேட்டபோது கருங்காளி கட்டைகள் மகேந்திரன் தான் கருங்காளி கட்டைகளை இங்கு கொண்டுவந்து வைத்தார் என்று சொன்னார். வனச்சரகர் மகேந்திரனின் செல்போனுக்கு தொடர்புக்கொண்டு ஈஸ்வரி வீட்டுக்கு வரச்சொன்னார். மகேந்திரன் வரவே இல்லை.

3. கைப்பற்றிய கருங்காளி கட்டைகளை அலுவலகத்திற்கு எடுத்துச்செல்ல முற்பட்டபோது அப்போது முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சின்னப்பன் என்பவர் அங்கு வந்தார். அவர் எங்களை இங்கிருந்து போய்விடுங்கள், எங்களை ஒரு மயிரும் புடுங்க முடியாது என்றுச்சொன்னார். அவருடன் இருந்த வினோத்குமார் என்பவர் இந்த தேவடியா பசங்களை அடித்துக்கொள்ளுங்கள், சும்மா விடக்கூடாது, இங்கிருந்து ஒருவரும் உயிருடன் போகக்கூடாது என்றுச்சொன்னார்.

4. இரண்டு எதிரிகளும் எங்களை அரசுப்பணியை செய்யவிடாமல் தடுத்து மிரட்டினார்கள். வனச்சரகர் காவல்துறைக்கு தகவல் சொல்லி காவல் துறையினர் வந்தனர். காவல் துறையினர் வருவதற்கு முன்பாக எதிரிகள் இருவரும் சென்றுவிட்டனர். கருங்காளி கட்டைகளை காவல் துறை துணையுடன் அலுவலகத்திற்கு எடுத்துவந்துவிட்டோம்.

5. இன்று எதிரி வினோத்குமார் ஆஜராகியுள்ளார். எதிரி சின்னப்பன் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6. வனச்சரகர் கொடுத்த தகவலின் அடிப்படையில் சம்பவயிடத்திற்கு போனோம். நாங்கள் வனக்காப்பாளர் 4 பேர் மற்றும் வனச்சரகர் ஆகியோர் சென்றோம். இரவு சுமார் 7–7.30 மணிக்குள் எங்களுக்கு தகவல் கிடைத்தது. எனக்கு தகவல் வரும்போது கோனூர் பீட் பகுதியில் இருந்தேன். தகவல் கிடைத்ததும் வனச்சரகர் அலுவலகம் வந்து அதன்பிறகு சம்பவயிடத்திற்கு போனோம்.

7. வனச்சரகர் அலுவலகம் வரும்போது சுமார் 07.30 மணியிருக்கும். கருங்காளி கட்டைகள் எவ்வளவு நீளம், எவ்வளவு தடிமன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கருங்காளி கட்டைகளை வனச்சரகர் அலுவலகம் எடுத்துச்சென்றோம். நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அந்த கட்டைகள் இதுவரை எங்கள் அலுவலகத்தில் தான் உள்ளது. அதுக்குறித்து காவல் துறையினருக்கு கைப்பற்றுதல் மகசர் எதுவும் தயார் செய்து அனுப்பிவைக்கப்படவில்லை.

8. மாவட்ட வன அலுவரின் உத்தரவின் பேரில் மேற்படி கட்டைகளை எங்கள் அலுவலகத்தில் வைத்துள்ளோம். கைப்பற்றியதற்கு ஆவணங்கள் ஏதேனும் தயார் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் எந்த ஆவணத்திலும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை. என்னுடன் வந்த வனத்துறையினர் கைப்பற்றுதல் மகசரை தயார் செய்தார்களா என்று எனக்கு தெரியாது.

9. மகேந்திரன் என்பவரிடம் இருந்து தான் கருங்காளி கட்டைகள் கைப்பற்றப்பட்டது என்பதற்கான எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஈஸ்வரியின் வீட்டின் அருகே நாங்கள் இருக்கும்போது சுமார் 10–20 பேர் கூட்டம் கூடியிருந்தனர். காவல் நிலையத்தில் மேட்டூர் வனச்சரகர் அலுவலர் சுரேஸ்குமார் என்பவர்தான் புகார் கொடுத்தார்.

10. 23.01.2024 ம் தேதி காலை சுமார் 10–10.30 மணிக்குள் புகார் கொடுத்தோம். நான், கோபால் கண்ணன், நல்லத்தம்பி மற்றும் சதீஸ் ஆகியோர் வனச்சரகருடன் சென்று புகார் கொடுத்தோம். புகாரில் நான் கையெழுத்து போடவில்லை. கிராம

நிர்வாக அலுவலருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலரும், அவரின் உதவியாளரும் சம்பவயிடத்திற்கு வந்து கடைசிவரை இருந்தார்கள். புகாரை காவல் நிலையத்தில் இருந்த ஒரு தலைமை காவலர் எழுதினார். புகாரை 4 பேரும் சொல்ல சொல்ல போலீசார் கையால் எழுதிக்கொண்டார்.

11. சம்பவயிடத்திற்கு உதவி ஆய்வாளர் ராஜா என்பவர் வந்தார். அவருடன் வந்த மற்ற 2-3 நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. 1 ம் எதிரி சின்னப்பன் என்பவர் கருங்கல்லூர் ஊராட்சி மன்ற தலைவராக 4 முறை இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் போகும்போதே 1 ம் எதிரி சின்னப்பன் சம்பவயிடத்தில் இருந்தார்.

12. 1 ம் எதிரி சின்னப்பன் வனச்சரகரிடம் என்ன விசயமாக வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார். 1 ம் எதிரி போதையில் இருந்தார். வனச்சரகர் கூடுதல் பொறுப்பாக மேட்டுர் வனச்சரகத்தை கவனித்து வந்தார். போலீசார் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. மகேந்திரன் என்பவரின் பெயரில் தனியாக வனச்சட்டத்தின் பேரில் வழக்கு பதிவுசெய்துள்ளோம்.

13. அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு சொன்னநேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், வனச்சரகருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(12.10PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**